செ.வெ.எண்:40/ஜனவரி நாள்: 26-01-2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## காவல்துறை ஆயுதப்படை மைதானத்தில் நடைபெற்ற குடியரசு தினவிழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

இராமநாதபுரம் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில், இராமநாதபுரம், காவல்துறை ஆயுதப்படை மைதானத்தில் இன்று (26.01.2016) நடைபெற்ற குடியரசு தினவிழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து, காவல்துறை அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு, சுதந்திரப் போராட்டத் தியாகிகளைக் கௌரவித்தார். அதன்பின்பு சிறப்பாகப் பணியாற்றிய காவலர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கத்தினையும், பாராட்டுச் சான்றிதழ்களையும், பல்வேறு அரசுத் துறை அலுவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து வேளாண்மைத்துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, முன்னாள் படைவீரர் நலத்துறை, சமூகநலத்துறை, மாவட்ட பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தாட்கோ, கால்நடை பராமரிப்புத்துறை, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், சமூக பாதுகாப்புத் திட்டம் உள்ளிட்ட துறைகளின் சார்பில் 76 பயனாளிகளுக்கு உதவி உபகரணங்கள், ஆயில் எஞ்சின், மாங்கன்று, தையல் இயந்திரம், சலவைப் பெட்டி, ஊராட்சி அளவிலான குழுவிற்கு ஊக்கத் தொகை, வருடாந்திர பராமரிப்புத் தொகை, திருமண உதவித் தொகை, இயற்கை மரணம் மற்றும் விபத்திற்கான நிவாரணத் தொகை, புதிய வாகனம் வழங்குதல் உள்ளிட்ட ரூ.20 இலட்சத்து 25 ஆயிரம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

பின்னர் இராமநாதபுரம் அரசு இசைப்பள்ளி, இராமேஸ்வரம் பர்வதவர்த்தினி அம்மன் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, தேவிபட்டிணம் புகாரியா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, கீழக்கரை ஹமீதியா மேல்நிலைப்பள்ளி, மக்தூமியா மேல்நிலைப்பள்ளி, ஓரியூர் புனித அருளானந்தர் மேல்நிலைப்பள்ளி, திருப்புல்லாணி அரசு மேல்நிலைப்பள்ளி, ஆகிய பள்ளிகள் மற்றும் கலை பண்பாட்டுத்துறை மாவட்ட ஜவஹர் சிறுவர் மன்றத்தைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகளும், சிறப்பாக நடைபெற்றன.

இவ்விழாவில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.என்.மணிவண்ணன்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.மு.அலி அக்பர், இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு..இரா.ராம்பிரதீபன், பரமக்குடி சார் ஆட்சியர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப.,, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திரு.மு.சுந்தரபாண்டியன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் திரு.பி.ஜெயஜோதி, மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.காமாட்சி கணேசன் உள்ளிட்ட அனைத்து அரசுத்துறை அலுவலர்கள், முக்கியப் பிரமுகர்கள், மாணவ மாணவியர்கள், உள்ளாட்சி மற்றும் கூட்டுறவு அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**